IntSym 2019
9th International Symposium

# SPATIAL PATTERN OF LIVELIHOOD ASSETS AND POVERTY DIMENSION: SPATIAL REFERENCE TO KODIKAMAM REGION

**S. Yasotha[257] & U. Subajini[258]**

Correspondence: yasoy5473@gmail.com

ABSTRACT

Poverty is seen to be the worst social and economic problem in the world today. It is the unequal distribution of livelihood assets that leads to poverty among certain sections of the population. A large number of families living in and around Kodikamam are under the poverty line. Owing to this, they are unable to face the challenge posed by their economic crisis. As such, there arises the necessity to evaluate their poverty and take steps to eradicate it correctly. This study aims at surveying the exiting poverty situation. On the basis of the livelihood assets of the people and mapping them out. Besides it is also the aim of this research to identify the main livelihood aspects and map the part played by locational variations in determining the distribution of poverty and to accelerate the eradication of such poverty. While data were obtained from every Grama officer division in Kodikamam on the bases of livelihood assets, primary data were also collected through such methods – as discussions and direct observation. GIS technic was adopted as the methodology for mapping. These were later brought under a multispectral analysis, bases on locational variations. After that, the capital for livelihood were demarked each for separate analysis. Following this the poverty map was prepared on the bases of the livelihood assets which were later compared with the poverty map based on the Samuruddhi scheme and results obtained. The map based on the livelihood assets of each grama officer division were evaluated at three different levels. Thereby the causes of poverty were diagnosed, and the relations between livelihood assets and poverty were studied. Through this study, the discrepancies in the poverty levels, as well as in the livelihood capitals, and the causes for such discrepancies were observed. This study would be of assistance to regional development policymakers and also to planners, to identify the locational distribution of poverty and to eradicate it. Besides this study should also pave the way to undertake poverty eradication activities and to create a more prosperous society with improved livelihoods.

**Keywords:** livelihood, poverty, locational distribution, livelihood assets, grama officer division

**ஆய்வுச்சுருக்கம்.**

தற்காலத்தில் உலகில் மிகவும் தீவிரமான சமூகப் பொருளாதாரப் பிரச்சினையாக வறுமை காணப்படுகின்றது. வாழ்வாதாரச் சொத்துக்களில் காணப்படும் சமமற்ற பரம்பலே வறுமையினைத் தோற்றுவிக்கின்றது. கொடிகாமம் பிரதேசத்தில் அதிகளவிலான குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்துவருகின்றனர். இதனால் இன்றைய பொருளாதார நெருக்கடி நிலைக்கு இம் மக்கள் ஈடுகொடுக்க முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர். ஆகவே இப்பகுதியில் வறுமையைச் சரியான முறையில் மதிப்பிட்டுஅதனை ஒழிக்கவேண்டியது அவசியமானதாகக் காணப்படுகின்றது. கொடிகாமம் பிரதேசத்தில் நிலவும் வறுமையினை வாழ்வாதாரச் சொத்துக்களின் அடிப்படையில் அளவீடு செய்து அதனைப் படமாக்கிக் காட்டுவதனை இலக்காகக் கொண்டுள்ளது அத்துடன் வாழ்வாதாரச் சொத்துக்களை அளவிடுவதற்கான கட்டளைக் கற்களை அடையாளம் செய்து வாழ்வாதாரச் சொத்துக்களின் அடிப்படையில் வறுமையின் இடம்சார் பாங்கினை படமாக்குவதன் மூலம் வாழ்வாதாரச் சொத்துக்களின் அடிப்படையில் வறுமையின் பரம்பலைக் கண்டறிந்து வறுமை ஒழிப்பினைத் துரிதப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

[257] Department of Geography, University of Jaffna, Sri Lanka.
[258] Department of Geography, University of Jaffna, Sri Lanka

கொடிகாமம் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவுகளிலும் வாழ்வாதாரச் சொத்துக்களினடிப்படையிலானதரவுகள் பெறப்பட்டதோடு கலந்துரையாடல் மற்றும் நேரடியவதானிப்பு போன்ற முறைகள் ஊடாக முதலாம்நிலைத்தரவுகள் என்பன பெறப்பட்டன. பகுப்பாய்வுச் செயன்முறையாக GIS தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி படமாக்கலானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. பின்னர் அவை இடம்சார் ரீதியான பல்பரிமாணப் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு வாழ்வாதார மூலதனங்கள் தனித்தனியாகப் படமாக்கப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வாழ்வாதாரச் சொத்துக்களினடிப்படையில் வறுமைப்படம் தயாரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்து அதனை சமுர்த்தித் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட வறுமைப் படத்துடன் ஒப்பிடப்பட்டும் பெறுபேறுகள் பெறப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிற்குமான வாழ்வாதாரச் சொத்துக்களின் அடிப்படையிலான படங்கள் மூன்று மட்டங்களில் மதிப்பிடப்பட்டு வறுமையின் காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன் வறுமைக்கும் வாழ்வாதாரச் சொத்துக்களிற்கும் இடையிலான தொடர்புகளைப் பற்றி ஆராயப்பட்டுள்ளது. இதன்மூலம் வெவ்வேறு கிராமசேவகர் பிரிவுகளிலும் வறுமையிலும் வாழ்வாதார மூலதனங்களிலும் காணக்கூடிய ஏற்றத்தாழ்வுகள் கண்ணடறியப்பட்டுள்ளதுடன் அவற்றிற்கான காரணங்களும் கண்டறியப்பட்டுள்ளன. இவ் ஆய்வானது வறுமையின் இடம்சார் ரீதியான பரம்பலை அறியவும் அதனை ஒழிப்பதற்கு சிறந்த திட்டங்களை மேற்கொள்ளவும் பிரதேச அபிவிருத்திக் கொள்கைவகுப்பாளர்களிற்கும் திட்டமிடலாளர்களிற்கும் பயனுடையதாக இருக்கும். மேலும் இவ் ஆய்வானது வறுமை ஒழிப்பு நடவடிக்கையினை மேற்கொள்ளவும் வாழ்வாதார மேம்பாடுடைய சுபீட்சமான சமூகத்தை தோற்றுவிக்கவும் வழிசமைக்கும்.

**திறவுச் சொற்கள்:-** வாழ்வாதாரம், வறுமை, இடம்சார் பரம்பல், வாழ்வாதாரச் சொத்துக்கள், கிராமசேவகர் பிரிவு.

## 1.1 அறிமுகம்.

உலகளாவிய ரீதியில் தற்காலத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக வறுமையானது காணப்பட்டு வருகின்றது. இவ் வறுமையானது காலத்திற்குக் காலம் மாறுபட்ட தன்மைகளினடிப்படையில் ஏற்பட்டு வருகின்றது. அதிகளவாக இவ் வறுமையானது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிடையே அடையாளம் காணக்கூடியதாகக் காணப்படுகின்றது. இதனை ஏற்படுத்தும் காரணிகளாக அந் நாடுகளில் காணப்படும் சமூகப் பொருளாதார, அரசியல் கலாசார சூழ்நிலைகள் காணப்படுகின்றன. அந்தவகையில் இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. குறிப்பாக இன்றைய நிலையில் கடந்த மூன்று தசாப்தகால யுத்தநிலைமைகள் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டதனை அடுத்து இலங்கையின் வடமாகாணமானது பல்வேறுபட்ட சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளில் பின்தங்கிய வகையில் வறுமையினைப் பெரிதும் எதிர்கொண்டுவரும் பகுதியாகக் காணப்படுகின்றது. அவ்வாறக வறுமையினை எதிர்நோக்கி வரும் பிரதேசங்களுள் கொடிகாமப் பிரதேசமும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

இப்பகுதியில் மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளிலும் அதிகளவிலான குடும்பங்கள் வறுமையினை எதிர்கொண்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர். இப் பிரதேசத்தில் வறுமையினை குறைப்பதற்காக பல்வேறுபட்ட வறுமையொழிப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தும் இன்றுவரை இப் பிரதேசத்தின் வறுமை நிலையினை குறைக்க முடியாத நிலையினை அவதானிக்கக் கூடியதாகக் காணப்படுகின்றது. அந்தவகையில் ஆய்வுப் பிரதேசத்தில் நிலவிவரும் வறுமையின் இடம்சார்ந்த பரம்பலினைக் கண்டறிவதன் மூலம் எதிர்வரும் காலப்பகுதிகளில் இந் நிலமையில் மாற்றங்களைக் கொண்டுவர முடிவதுடன் கொடிகாமம் பிரதேசத்தின் பொருளாதார ரீதியான வளர்சிக்கும் அது வாய்ப்பாக அமையும் அந்த அடிப்படையில் இவ்வாய்வு கொடிகாமப் பிரதேசத்தில்வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பாங்கினடிப்படையிலான வறுமையின் பரிமாணத்தினை ஆராய்வதாகக் காணப்படுகின்றது.

## 1.2 இலக்கிய மீளாய்வு.

சுபாயினி உதயராசா, கருணாகரன் சுதாகர் என்பவர்களால் ''வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பாங்கும் வறுமையின் பரிமாணமும்'' என்ற தலைப்பில் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் பிரிவினைச் சிறப்பாகக் கொண்டு ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தவகையில் வாழ்வாதாரம் என்பது வாழ்க்கைத் தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதற்கான ஒரு மூலமாகும். நிலைத்து நிற்க்கக்கூடிய வாழ்வாதாரமானது தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய வாழவாதார்தைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமையும் இயற்கை, சமூக, பௌதீக, மானிட மற்றும் நிதிமூலதனம் ஆகிய ஐந்து சொத்துக்களிலும் தங்கியுள்ளது. மேலும் இங்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் காணப்படுடம் வாழ்வாதாரச் சொத்துக்களின் அடிப்படையில் வறுமையின் இடம்சார்ந்த பரம்பலை அறிவதே இவ் ஆய்வின் நோக்கமாகக் காணப்படுகின்றது.

Ayeni Gabriel olusegun, dr. bankole.b.o (2015) என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட "poverty mapping potential application in the analysis of spatial distribution of poverty in ekiti state Nigeria" என்ற ஆய்வுக்கட்டுரையில் வறுமை வரைபடமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் நோக்கமாக சமூகப் பொருளாதார நலவாழ்வுப் பற்றாக்குறையினை பிறவகைத் தரவுகளுடன் ஒப்பிட்டு பகுதி அலகு மட்டத்தில் நிர்ணயிப்பதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மற்றும் இதன் வெளியீடுகளாக இவ் (EKITI State) மாநிலத்தின் வறுமை பிணைப்புக்கள், மற்றும் சமத்துவமின்மையினையும் கண்டறிவதனையும் நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இவ் ஆய்வின் தரவுகளின் முடிவுகளானவை வரைபடங்களாகவும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. அத்தோடு 2000 மற்றும் 2009 ம் ஆண்டுகளின் வறுமைக் காரணிகளை ஒப்பிடுவதன் மூலம் வறுமைப் பரவலைப் பகுப்பாய்வு செய்வதற்கு வறுமை வரைபடங்களைப் பயன்படுத்துவதே இவ் ஆய்வின் நோக்கமாகக் காணப்படுகின்றது. மேலும் இவ் பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கு இரண்டு வருட மாறிகளும் ஐந்து வறுமைக்காரணிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

Particia kritjasnson, maren rodeny, isabelle baltenceak, josep oguta, annotenbaert என்பவர்களால் (2005) "lively hood mapping and poverty correlates at a meso – level in Kenya" எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுயைானது எழுதப்பட்டுள்ளது. இது தெற்கு கென்யாவில் உள்ள அரை வரண்ட மாவட்டத்தின் ogro pastorai சமூகத்தின் நலன், தந்திரோபாயம், பொதுவாக வாழ்வாதார விருப்பங்களை தீர்மானிக்கின்ற காரணிகள் பெரும்பாலும் இயற்கை, சமூக, மனித, நிதி மற்றும் பௌதீக மூலதனச் சொத்துக்கள் போன்றவற்றை இடம்சார் காரணிகள் என்ற வகையில் அடையாளம் கண்டு ஆராய்ந்து படமாக்கலை மேற்கொள்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இங்கு மூன்று அணுகுமுறைகள் அடிப்படையில் தொழிற்படுகின்றது. முதலாவதாக அந்த மாவட்டத்தின் வாழ்வாதார வரைபடத்திற்கான basal in data சேகரித்தல் locating schools, other service facilities, water source and job opportunities இரண்டாவதாக kajication பிரதிநிதிகள், உள்ளூர் சமூங்கள் மற்றும் அரசாங்கப் பிரதிநிதிகள் போன்ற ஏனைய அமைச்சுக்களும் அதனை நெருக்கமாகச் சுற்றியுள்ள இயற்கை வளங்கள், வெளியேறும் முறைகள், மூன்றாவதாக செயன்முறைகள் மற்றும் உற்பத்தி வாழ்வாதார வரைபடம் போன்றவற்றை பங்குதாரர்கள் மற்றும் உற்பத்தி வெளியீட்டாளர்கள் ஊடாக செயன்முறைப்படுத்தல் என்ற அணுகுமுறைகள் காணப்படுகின்றன.

Olaf erenston jon hellion parvesh Chandra என்பவர்களால் "poverty map based on livelihood assets; a meso level application in the indo – gangetic plains, india" எனும் ஆய்வுக் கட்டுரையானது 2010 இல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தியாவின் வடக்கே உள்ள ஐந்து மாநிலங்களை ஆய்வுப் பிரதேசங்களாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இயற்கை, சமூகப் பொருளாதார, பௌதீக மற்றும் நிதி போன்ற வாழ்வாதாரச் சொத்துக்களுடைய பயன்பாடு மற்றும் நிலைத்திருக்கக்கூடிய வாழ்வாதாரக்


கட்டுமானத் தொகுதிகள் என்பவற்றைக் கொண்டு வறுமையினை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Upali Amarasinghe∗, Madar Samad, Markandu Anputhas என்போர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள"Spatial clustering of rural poverty and food insecurity in Sri Lanka" இவ்வாய்வில் வறுமை தொடர்பாகப் படமாக்கப்பட்டுள்ளது. இங்கு ஊட்டச்சத்துக்களுடன் இணைந்த வறுமையின் இடம்சார் பரம்பலை இலங்கையினை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதேசசெயலக்தின் மூலம் வடிவமைக்கப்பட்ட வறுமை தொடர்பான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு synthetic small area techniq இனை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான தரவு மூலமாக பிரதேச செயலகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள வறுமை தொடர்பான படம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு புள்ளிவிபரவியல் ரீதியான cluster இதில் பெறப்பட்டுள்ளது அதில் ஒரு cluster ஆனது குறைந்த வறுமை கொண்ட கிராமப்பிரதேசங்கள் குறைந்தளவிலான வறுமையினைக் கொண்ட நகரப்பிரதேசங்களைச் சூழக் காணப்படுகின்றன, இங்கு குறைந்தளவிலான விவசாயத் தொழில் வாய்ப்புக்கள், சிறிய வீதி வலையமைப்புக்கள் முக்கியமான பண்பாகக் காணப்படுகின்றன.

### 1.3 ஆய்வின் நோக்கங்கள்.

- வாழ்வாதார சொத்துக்களின் இடம்சார் பரம்பலைக் கண்டறிதல்
- வாழ்வாதாரச் சொத்துக்களின் அடிப்படையில் வறுமையின் இடம்சார் பரம்பலைப் படமாக்கல்.
- வறுமையினைக் குறைப்பதற்கான வழிவகைகளை முன்வைத்தல்.

## 02. ஆய்வுப் பிரதேசம்.




உரு 2.1

இலங்கையின் வடமாகாணத்தில் காணப்படும் ஐந்து நிர்வாகமாவட்டங்களில் ஒன்றான யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படும் பிரதேச செயலகங்களில் ஒன்றான தென்மராட்சி பிரதேச செயலகத்தில் 60 கிராமசேவையாளர் பிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றுள் மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய கொடிகாமம் ஆய்வுப் பிரதேசமாகும். மேலும் இவ்வாய்வுப் பிரதேசத்தின் மொத்தப் பரப்பு 11.96 சதுரக் கிலோமீற்றர்களாகும். இவ்வாய்வுப் பிரதேசத்தில் மொத்தமாக 1496

குடும்பங்கள் வசிப்பதோடு அவற்றுள் 268 குடும்பங்கள் பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களாகவும் காணப்படுகின்றன

## 03. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது புவியியல் தகவல் ஒழுங்கின் அடிப்படையில் (geographical information system - GIS) மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக Arc GIS இன் 10.4.1 Version இனைப் பயன்படுத்தி வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பலினைக் கண்டறிந்து அதனைப் படமாக்கி வறுமையின் பரிமாணத்தினையும் அதன் தன்மைகளையும் கண்டறிய பல்பரிமாணப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (Spatial multy criteria analysis) இப் பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கான ஆரம்பச் செயன்முறையாக கொடிகாமப் பிரதேசத்தின் கிராமசேவகர் பிரிவுகளின் நெய்யரிப்படத்தினை (vector map) பெற்றுக்கொள்ளும் செயற்பாடு காணப்பட்டது. Arc GIS இன் 10.4.1 verson ஊடாக ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிற்குமான வாழ்வாதாரக் கட்டளைக்கற்களிற்கான தரவுகளானவை Attribute table இல் பதிவுசெய்யப்பட்டுள்ளன. Attribute table இல் பதிவுசெய்யப்பட்டுள்ள வாழ்வாதாரச்சொத்துக்களின் கட்டளைக் கற்கள் ஒவ்வொன்றும் Raster operation Clhf Attribute map மூலம் ஒவ்வொன்றும் படமாக்கப்பட்டுள்ளன பின்னர் இடம்சார் பல்பரிமாணப் பகுப்பாய்வினூடான செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

Attribute mapஆகப் படமாக்கப்பட்ட கட்டளைக் கற்களை மனித மூலதனம், பௌதீக மூலதனம், நிதி மூலதனம், சமூக மூலதனம் என்ற சொத்துக்களினடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மூலதனங்களும் நியமப் பெறுமானம்(standardize value) கொடுக்கப்பட்டு கட்டளைக்கற்களின் அடிப்படையில் அதிக வறுமையை ஏற்படுத்தும் கட்டளைக் கற்களுக்கு ஒன்று என்ற அடிப்படையிலும் குறைந்த வறுமையினை ஏற்படுத்தும் கட்டளைக் கற்களிற்கு 0 என்ற அடிப்படையில் பெறுமானம் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் ஒவ்வொரு கட்டளைக்கற்களிற்கும் நிறை கொடுக்கப்பட்டது. வறுமையானது ஏற்பட எவ் கட்டளைக்கல் அதிக பங்களிப்புச் செய்கின்றதோ அதனடிப்படையில் தரப்படுத்தப்பட்டு நிறை கொடுக்கப்பட்டுள்ளது. பின் வாழ்வாதாரச் சொத்துக்களான ஐந்து மூலதனங்களிற்கும் தனித்தனியான மூலதனப்படமானது தயாரிக்கப்பட்டுள்ளது. பின்னர் ஐந்து வாழ்வாதார மூலதனங்களிற்குமான வெளியீட்டுப்படத்தினை ஒன்றாக இணைத்து எந்த மூலதனத்தில் வறுமை முதன்மையானதாகக் காணப்படுகின்றதோ அதனடிப்படையில் நிறை கொடுக்கப்பட்டு வறுமை தொடர்பான வாழ்வாதரச் சொத்துக்களின் பரம்பற் படம் தயாரிக்கப்பட்டுள்ளது.


### 3.1 தரவுப் பகுப்பாய்வும் முடிவுகளும்.

ஆய்வுப் பிரதேசத்தின் ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவுகளிலும் காணப்படும் ஒவ்வொரு மூலதனத்தினையும் அளவீடு செய்வதற்காக வறுமையில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய கட்டளைக்கற்கள் தெரிவுசெய்யப்பட்டன.**வாழ்வாதார சொத்துக்களின் இடம்சார் பரம்பலைக் கண்டறிவதற்காக (நோக்கம் ஒன்று)** பௌதிக மூலதனக் கட்டளைக் கற்களாக நிரந்தர வீடுகள், தற்காலிக வீடுகள், மலசல கூடங்கள், கிணறுகள், பாடசாலைகள், மின்சார வசதிகள், எரிபொருளாக விறகுகளைப் பயன்படுத்துவோர் வீதம் என்பனவும், மனித மூலதனத்தினுள் குடும்பங்களின் எண்ணிக்கை, வேலையற்றோர் குடும்பங்களின் எண்ணிக்கை, பாடசாலை செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை, பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை, பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை என்பனவும், சமூக மூலதனக் கட்டளைக் கற்களாக மருத்துவ சுகாதார வசதிகள், சமூக சேவை நிறுவனங்களின் எண்ணிக்கை என்பனவும், நிதி மூலதனத்தில் அரசதொழில் புரியும் குடும்பங்களின் எண்ணிக்கை, 4500 ரூபாய்கு மேற்பட்ட வருமானம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை, வங்கிகளின் எண்ணிக்கை, சமுர்த்தி பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை, வேலைசெய்வோர் குடும்பங்களின் எண்ணிக்கை, வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை என்பனவும், பிரதேசத்தின் இயற்கை மூலதனக் கட்டளைக் கல்லாக ஆய்வுப் பிரதேசத்தின்

பரப்பளவும் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு இவ் ஒவ்வொரு கட்டளைக் கற்களினதும் புள்ளிவிபரத் தரவுகளை புஐளு தொழில்நுட்பத்தினூடாக அட்டவணைத் தரவுகளாக உட்செலுத்தப்பட்டு அதனை அடிப்படையாகக் கொண்டு படமாக்கப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் கொடிகாமப் பிரதேசத்தில் காணப்படும் மூன்று கிராமசேவகர் பிரிவுகளிலுமுள்ள ஒவ்வொரு கட்டளைக் கற்களும் வறுமையில் கொண்டுள்ள செல்வாக்கினை அடிப்படையாகக் கொண்டு வாழ்வாதாரச் சொத்துக்களின் கட்டளைக்கற்களானவை படமாக்கப்பட்டுள்ளன.

அதனையடுத்துகொடிகாமப் பிரதேசத்தில் காணப்படும் மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளிலும் பெறப்பட்ட வாழ்வாதாரக் கட்டளைக் கற்கள் பௌதிக மூலதனம், மனித மூலதனம், சமூக மூலதனம், நிதி மூலதனம், மற்றும் இயற்கை மூலதனம் எனும் ஐந்து வகைக்குள் வாழ்வாதாரச் சொத்துக்களானவை உள்ளடக்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டு படமாக்கலூடாக பகுப்பாய்வானது மேற்கொள்ளப்பட்டு வாழ்வாதாரச் சொத்துப் படமானது தயாரிக்கப்பட்டு முடிவுகளானவை பெறப்பட்டுள்ளன. ஒவ்வொரு மூலதனத்திற்கும் GIS தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்தவகையில் வாழ்வாதார மூலதனங்களுள் ஒன்றான மனித மூலதனமானது ஐந்து வகையான கட்டளைக் கற்களை அளவிட்டதன் மூலமாக மதிப்பிடப்பட்டது. இதனை உரு 3.1 இல் அவதானிக்கலாம். இந்தப்படத்தில் காட்டப்பட்டுள்ளவாறாக வாழ்வாதாரச் சொத்துக்களை அடிப்படையாகக் கொண்ட மனித மூலதனத்தின் இடம்சார் பரம்பலில் பெறப்பட்ட ஐந்து வகையான கட்டளைக் கற்களையும் பொதுமைப்படுத்தியதன் மூலமாக மூன்று வகுப்பாயிடைகளாகப் பிரிக்கப்பட்டு மனித மூலதனமானது காட்டப்பட்டுள்ளது. இதில் தெரிவுசெய்யப்பட்ட கட்டளைக்கற்களும் மனித மூலதனத்தின் அடிப்படையில் வறுமையின் இடம்சார் பரம்பலைத் தீர்மானிப்பதாகக் காணப்படுகின்றது.

**மனித மூலதனம்**





உரு 3.1

மனித மூலதனத்தினைப்போன்று சமூக மூலதனக் கட்டளைக் கற்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட படங்களின்பொதுமைப்படுத்தப்பட்ட அளவீட்டை அடிப்படையாகக் கொண்டு சமூக மூலதனத்தினடிப்படையில் வறுமையின் பரம்பலானது படமாக்கிக் காட்டப்பட்டுள்ளது. இதனை உரு 3.2 இல் அவதானிக்கலாம்.

**சமூக மூலதனம்**







உரு 3.2

மனிதன் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஏற்படுத்திக் கொண்ட விடயங்கள் பௌதிக மூலதனங்களாகக் காணப்படுகின்றன. இவை பொருளாதார ரீதியான அபிவிருத்தியினை ஏற்படுத்துகின்றன. அந்தவகையில் கொடிகாமப் பிரதேசத்தில் வறுமையினை ஏற்படுத்தும் காரணிகளாக வாழ்வாதாரச் சொத்துக்களானவை காணப்படுகின்றன. அவற்றுள் பௌதிக மூலதனங்களை அறிந்து கொள்வதற்காக ஏழு கட்டளைக்கற்களானவை தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் வறுமையில் கொண்டுள்ள

செல்வாக்கினடிப்படையில் நிறையிடலானது மேற்கொள்ளப்பட்டு முடிவுகளானவை பெறப்பட்டுள்ளன. இதனை உரு 3.3 இன் மூலம் அவதானிக்கக் கூடியதாகக் காணப்படுகின்றது.

**பௌதிக மூலதனம்**





உரு 3.3

கொடிகாமப் பிரதேசத்தின் வாழ்வாதாரச் சொத்துக்களை அளவிட்டு வறுமையினை மதிப்பிடும் கட்டளைக் கற்களில் ஒன்றாக நிதி மூலதனமானது காணப்படுகின்றது. இவ் ஆய்வுப் பிரதேசத்தில் நிதி மூலத்தினை அறிந்து கொள்வதற்காகப் பல கட்டளைக் கற்கள் தெரிவுசெய்யப்பட்டு தரவுகள் பெறப்பட்டு அதனடிப்படையில் பகுப்பாய்வுச் செயன்முறையானது மேற்கொள்ளப்பட்டு முடிவுகளானவை பெறப்பட்டுள்ளன. அந்தவகையில் ஆறு வகையான கட்டளைக்கற்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு அவை படமாக்கப்பட்டு அவற்றை மேற்பொருத்தற்




**நிதி மூலதனம்.**

செய்முறைக்கூடாக பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நிதி மூலதனத்தினை அடிப்படையாகக் கொண்ட வறுமைப் படமானது தயாரிக்கப்பட்டது. இதனை உரு 3.4 இன் மூலம் அவதானிக்கலாம்.




உரு 3.4

கொடிகாமப் பிரதேசத்தின் வாழ்வாதாரச் சொத்துக்களை அளவிடும் மூலதனங்களில் ஒன்றாக இயற்கை மூலதனம் காணப்படுகின்றது. அந்தவகையில் இயற்கை மூலதனம் எனும்போது ஒரு பிரதேசத்தில் இயற்கையாகவே அமைந்து காணப்படும் வளங்கள் இம் மூலதனத்தினுள் உள்ளடங்குகின்றன. குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் இயற்கை மூலதனத்தினை அளவிடுவதற்கான குறிகாட்டியாக பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பு தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இப் பிரதேசத்தில் இயற்கை வளங்களாகக் காடுகள், நீர் நிலைகள்,ஈர நிலங்கள் போன்ற எவையும் காணப்படாத நிலையில் பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பு இயற்கை மூலதனத்தினை அளவிடும் சுட்டியாகத் தெிவுசெய்யப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே ஆய்வுப் பிரதேசத்தின் இயற்கை மூலதனமானது படமாக்கப்பட்டுள்ளது. இதனை உரு 3.5 இன் மூலம் அடையாளம் கண்டு கொள்ளலாம்.





உரு 3.5

மேலும் வாழ்வாதாரச் சொத்துக்கள் வறுமையினைத் தோற்றுவிப்பதில் கொண்டுள்ள செல்வாக்கை வெளிப்படுத்தும் வகையில் வாழ்வாதாரச் சொத்துக்களினை அடிப்படையாகக்

கொண்ட வறுமைப்படமானது தயாரிக்கப்பட்டது. இதனடிப்படையில் வறுமைக்கும், வாழ்வாதாரச் சொத்துக்களிற்கும் இடையிலான தொடர்புகளானவை

இனங்காணப்படும் வகையில் வறுமையினை அடிப்படையாகக் கொண்ட வாழ்வாதார மூலதனங்கள் ஐந்தினையும் ஒன்றிணைத்து வறுமையினை அடிப்படையாகக் கொண்ட வாழ்வாதாரப் சொத்துப்படமானது தயாரிக்கப்பட்டது. இதனை கீழே காட்டப்பட்டுள்ள உரு 3.6 இன் மூலம் அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

**வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பல்**





உரு 3.6

**நோக்கம் இரண்டு:-** வாழ்வாதாரச் சொத்துக்களின் அடிப்படையில் வறுமையின் இடம்சார் பரம்பலைப் படமாக்கிக் கொள்ளல்.

**வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பலிற்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்பு.**

அந்தவகையில் வாழ்வாதாரச் சொத்துக்களினடிப்படையில் வறுமையானது கொடிகாமம் தெற்குJ/328 கிராமசேவையாளர் பிரிவில் அதிகமாகக் காணப்படுகின்றது. கொடிகாமம் வடக்கு J/327 கிராமசேவையாளர் பிரிவில் வாழ்வாதாரச் சொத்துக்களின் அடிப்படையில் வறுமையானது மத்திமமான நிலையில் காணப்படுகின்றது. சமுர்த்திக் கொடுப்பனவுகளினடிப்படையில் வறுமை தொடர்பாக நோக்கும்போது கொடிகாம் வடக்கு J/326 கிராமசேவையாளர் பிரிவில் அதிகளவிலான சமுர்த்திப் பயனாளிகள் காணப்படுகின்றனர் கொடிகாமம் தெற்கு J/328 கிராமசேவையாளர் பிரிவில் மத்திமமான நிலையிலும் கொடிகாமம் மத்தி J/327 கிராமசேவையாளர் பிரிவில் குறைந்தளவிலும் காணப்படுகின்றது. ஆகவே இப் பிரதேசங்களில் சமுர்த்திக் கொடுப்பனவுகள் மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளிலும் சரியான முறையிலான தெரிவுகள் மேற்கொள்ளப்படாது வழங்கப்படுகின்றது என்பதனை தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது இதனை உரு 3.7இன் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

| வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பல் | சமுர்த்திக் கொடுப்பனவுகளினடிப்படையில் வறுமையின் இடம்சார் பரம்பல் |
|---|---|




உரு 3.7

**04. ஆய்வின் முடிவு.**

கொடிகாமப் பிரதேசத்தின் மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளிலும் வாழ்வாதாரச் சொத்துக்களின் அடிப்படையில் வறுமையானது ஒரே மாதிரியானதாகக் காணப்படவில்லை. ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவுகளிலும் ஒவ்வொரு கட்டளைக்கற்களின் பரம்பலானது வேறுபட்டதாகவே அமைந்து காணப்படுகின்றது. இதனால் இம் மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளின் வறுமையிலும் வேறுபாடுகளானவை காணப்படுகின்றன. அவ்வகையில் வாழ்வாதரச் சொத்துக்களை அடிப்படையாகக் கொண்ட படத்தினை அவதனிக்கும் போது சில முடிவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

அந்தவகையில் ஒவ்வொரு மூலதனங்களையும் அடிப்படையாகக் கொண்டு கொடிகாமப் பிரதேச வறுமையினை அளவிடும் போது நிதி மூலதனத்தினடிப்படையில் வறுமையானது கொடிகாமம் மத்தி J/327 பிரிவிலும் கொடிகாமம் வடக்கு J/326 பிரிவிலும் நடு நிலையாகக் காணப்படுகின்றது. கொடிகாமம் தெற்கு J/328 பிரிவு உயர்வான நிதி மூலதனத்தினைக் கொண்டுள்ளதால் குறைவான வறுமையினைக் கொண்டுள்ளது.

மனித மூலதனம் தொடர்பாக நோக்கும் போது கொடிகாமம் தெற்கு J/328 பிரிவில் குறைவாகக் காணப்படுவதுடன் அது அப்பகுதியின் வறுமையில் உயர்வாகச் செல்வாக்குச் செலுத்துவதனையும் கொடிகாமம் மத்தியில்J/327 பிரிவில் நடுத்தரமாகவும் கொடிகாமம் வடக்கு J/326 பிரிவில் மனித மூலதனம் உயர்வாகவும் காணப்படுவதனால் அது வறுமையில் குறைவாகச் செல்வாக்குச் செலுத்துவதனையும் அறிய முடிகின்றது.

இயற்கை மூலதனத்தின் பரம்பல் கொடிகாமம் மத்தி J/327 பிரிவில் குறைவாகக் காணப்படுவதால் அங்கு வறுமை உயர்வாகச் செல்வாக்குச் செலுத்துகின்றமையினை அடையாளம் காண முடிகின்றது.

பௌதிக மூலதனத்தின் இடம்சார் பரம்பற் பாங்கு தொடர்பாக நோக்கும் போது இப் பிரதேசத்தின் மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளிலும் நடுநிலையாகக் காணப்படுவதால் அது

கொடிகாமப் பிரதேச வறுமையில் நடு நிலையாகக் காணப்படுவதனை அடையாளம் காணப்பட்டுள்ளது.

சமூக மூலதனத்தின் இடம்சார் பரம்பலினை நோக்கும்போது கொடிகாமம் மத்தி J/327 பிரிவில் அதிகமாகவும் கொடிகாமம் வடக்கு J/326 பிரிவில் நடுநிலையாகவும் கொடிகாமம் தெற்கு J/328 பிரிவில் குறைந்தளவிலும் காணப்படுகின்றது. இந்த அடிப்படையில் சமூக மூலதனமானது கொடிகாமம் தெற்கு J/328 பிரிவில் வறுமையில் உயர்ந்தளவில் செல்வாக்குச் செலுத்துவதனை அடையாளம் காணப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் கொடிகாமம் பிரதேசத்திலுள்ள வாழ்வாதாரச் சொத்துக்கள் எவ்வாறான செறிவைக் கொண்டுள்ளன என மதிப்பீடு செய்யும் போது கொடிகாமம் தெற்கு J/328 கிராமசேவையாளர் பிரிவில் குறைந்தளவிலன வாழ்வாதாரச் சொத்துக்கள் இருப்பதனை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. இவ்வாறாக இப்பகுதியில் குறைந்தளவிலான வாழ்வாதாரச் சொத்துக்களானவை காணப்படுவதால் அப்பகுதியின் வறுமை அதிகமாகக் காணப்படுவதற்குக் காரணமாகக் காணப்படுகின்றது. கொடிகாமம் வடக்கு J/326, கொடிகாமம் மத்தி J/327 கிராமசேவையாளர் பிரிவுகளில் வாழ்வாதாரச் சொத்துக்களின் பரம்பலானது நடுநிலையானதாகக் காணப்படுகின்றது. இதனால் இப்பிரதேசங்களின் வறுமையில் இவை நடுத்தரமான நிலையில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

**நோக்கம் மூன்று:- வறுமையினைக் குறைப்பதற்கான வழிவகைகளை முன்வைத்தல்.**

அந்த வகையில் இப்பிரதேசத்தின் வறுமையினைக் குறைப்பதற்கான **தீர்வுகளையும் பரிந்துரைகளையும்** முன்வைக்க வேண்டியது அவசியமானதாகக் காணப்படுகின்றது. அந்த அடிப்படையில் பொருத்தமான உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களை அபிவிருத்தி தேவையான பகுதிகளில் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக கொடிகாமம் தெற்கு J/328 பிரிவில் உட்கட்டுமான வசதிகள் குறைவாகக் காணப்படுகின்றது. வீதிகளமைப்பு, கல்வி வசதிகள், மருந்துவ சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற செயற்ப்பாடுகளினை மேற்கொள்வதன் மூலம் இப் பகுதியின் வறுமையினைக் குறைத்துக் கொள்ளலாம்.

வறுமைத் தணிப்புத் திட்டங்களானவை பொருத்தமானவர்களைச் சென்றடைய வேண்டும். அதாவது இக் கொடிகாமப் பிரதேசத்தில் சமுர்த்தி நிவாரண முத்திரையானது பக்கச் சார்புகளினடிப்படையிலும் ஒழுங்கற்ற தெரிவுகளினடிப்படையிலும் வழங்கப்படுகின்றது.

சுயதொழில் வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். அதாவது பெண் தலைமைத்துவம் தாங்கும் குடும்பங்கள், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களிற்கு கோழிவளர்ப்பு, மாடு வளர்ப்பு, மற்றும் ஆடு வளர்ப்பு என்பவற்றை மேற்கொள்வதற்கு ஊக்குவிப்புக்களை வளங்குவதுடன் சுயதொழில் வாய்ப்பிற்கான சந்தை வசதியினையும் தென்மராட்சிப் பிரதேச செயலகம் ஊடாக ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும்.

கொடிகாமப் பிரதேசத்தில் வசிக்கும் வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சிகளை வளங்குவதுடன் அவர்களைப் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுத்திக் கொள்வதற்கான ஊக்கத்தைப் பிரதேசத்திலுள்ள உள்ளூர் அமைப்புக்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் என்பன வளங்குவதற்கு முன்வருதல் வேண்டும்.

மேலும் உள்ளூர் உற்ப்பத்திகளை உள்ளூரிலேயே மக்கள் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு வசிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். அத்தோடு உள்ளூர் முதலீட்டாளர்களிற்கு ஊக்குவிப்புக்களை வழங்கி தொழிற்சாலைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளினை மேற்கொள்ள வேண்டும்.

## 05 முடிவுரை

இவ்வாய்வினடிப்படையில் எதிர்காலத்திலும் இந் நிலை தொடருமாயின் கொடிகாமப் பிரதேச மக்களது ஆரோக்கியமான வாழ்விற்கும், பிரதேசத்தின் பொருளாதார ரீதியான வளர்ச்சிக்கும் இடையூறாக அமைந்துவிடும் என்பதுடன் பிராந்திய ரீதியிலான அபிவிருத்தியிலும் சமமின்மையினை ஏற்படுத்திவிடும். எனவே வளர்ந்துவரும் பிரதேசங்களில் ஒன்றான கொடிகாமம் பிரதேசத்தின் நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்திக்கு இப்பகுதியில் நிலவிவரும் வறுமையின் இடம்சார் பரம்பலினைக் கருத்திற்கொண்டு உரிய மாற்றங்களைக் கொண்டுவருவதன் மூலம் எதிர்காலத்தில் இப் பிரதேசத்தில் உருவாகவிருக்கும் வறுமை தொடர்பான பிரச்சினைகளை ஓரளவு குறைத்துக்கொள்ள முடியும்.

**உசாத்துணைகள்.**

Ayeni, Gabriel Oiusegan, Dr. Bankole,b.O (2015) “Poverty Mapping Potential Application In The Analysis Of Spatial Distribution Of Poverty Inekiti State” Ijikas Volume 2 Issue 6, June 2015

Department Of Census And Statics – Srilanka, (2015), “The Spatial Distribution Of Poverty In Srilanka”, Poverty Global Practice, World Bank Group.

David lomelingi, Rita nyokawani(2010) “Spatial distribution of food poverty incidence in juba town” Journal of food security, 2015

Erestein.O, Helin.J, Chdndra.P (2009), “poverty mapping based on livelihood assets; A meso-level application in the indo – gangetic plains india” international maixe and wheat improvement centre.

Nicholas minot, Bob Baulch (2002) “The Spatial Distribution Of Poverty In Vietnam And The Potential For Targeting” , Policy Research Working Paper – 2829, The World Bank, Development Research Group, Macroeconomics And Growth And International Food Policy Research Institute.

Particia kristanson,maren redeny, isabelle baltenweck,josep,oquta,an notenbaert., 2005, livelihood mapping and poverty correlates at a meso- level in Kenya., food policy30, 568- 583.

Thenmaradchi divisional statistical handbook (2016) PP 07-09.,20-27

சீதாமாயாதுன்னே, குலசமநாதன் ரொமேசன் (2013),“நகர்புற வறுமையினை அளவிடுவதில் இலங்கை வறுமைக் கோட்டின் பொருத்தப்பாடு கொழும்பிலான சம்பவக் கற்கை”, செயற்பாட்டுக் கட்டுரைத் தொடர் இல 19 – 2013

சுபாஜினி, உதயராசா.,சுதாகர், கருணாகரன்.,(2015).வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பாங்கும் வறுமையின் பரிமாணமும், ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவை சிறப்பாகக் கொண்டது.,சிந்தனை,இதழ்-03

சுமரட்ன.எம்.பி, (2010 - 2011),“இலங்கையில் காணப்படும் வறுமைச் சமமின்மையும் வறுமைசார் வளர்ச்சியும்”, பொருளியல் நோக்கு, மக்கள் வெளியீடு, பக்கம் 21 – 27